2—

வரதட்சணை வழக்குகளை முடிக்க காலக்கெடு நிர்ணயித்தல்

*44812—**திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரதட்சணை வழக்குகள் முடிக்க குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயித்து அரசு சட்டம் இயற்றுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, *சட்ட அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் இந்த அவையிலே 30 பெண் உறுப்பினர்கள் வர முடிந்தது. பெண் காவல் நிலையங்கள், குடும்ப நீதிமன்றம், பெண் சிசு வதைத் தடுப்புச் சட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், இப்படி பெண்களுக்காகவே பல திட்டங்களைத் தீட்டி, நல்லாட்சி புரிந்துவரக் கூடிய அன்னை, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியின் அரசில், வரதட்சணை வழக்கு போடப்பட்டு, அவர்கள் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு, அவர்களுக்கு இரண்டு, மூன்று குழந்தைகள் பிறந்த பிறகும்கூட, அந்த வழக்கு முடியாமல் இருக்கிறது. கேட்டால் அவர்கள் வீட்டு வேலைக்காரி என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசில் வரதட்சணை வழக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்தாக வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகுமானால் பெண் சமூகத்திற்காக வாழும் எங்கள் அன்னையின் ஆட்சியில் நிரந்தரமான இன்பம் பெண் இனத்திற்குக் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து இதைப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற 1961 ஆம் ஆண்டு Dowry

1995 நவம்பர் 3]

Prohibition Act-இன்படி காலக் கெடு கிடையாது. ஆனால், ஒரு மாநில அரசு விரும்பினால் அதனைச் சட்டமன்றத்திலே நிறைவேற்றலாம் என்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, விரைவில், ஒரு ஆறுமாத காலத்திற்குள் இந்த வரதட்சணை வழக்குகளை அவசியம் முடிக்க வேண்டும் என்ற சட்ட திருத்தத்தை இந்த அரசு கொண்டுவரும் என்பதனை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணை வழக்கைப் போட்டுவிட்டு சம்பந்தப்பட்ட ஆண்கள், அவர்களுடைய குடும்பங்களுடன் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். அவ்வாறு அவர்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்ற காலகட்டங்களில், இந்த வரதட்சணை வழக்குகளுக்கு சம்பந்தப்பட்டவர்களை குறித்த மாதத்தில் அங்கிருந்து இங்கே வரவழைக்க அரசாங்கமே நடவடிக்கை எடுக்குமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் துறையைக் கலந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஆறு மாத காலத்திற்குள் வழக்கை முடிக்கலாம் என்ற ஒரு சட்ட திருத்தத்தைக் கொண்டு வரலாம் என்று யோசித்துக் கொண்டிருப்பதாக இங்கே தெரிவித்தார்கள். எந்தவொரு குற்றவழக்கும் இரண்டு மாதங்களில் முடியவேண்டுமென்று ஏற்கெனவே ஹைகோர்ட்டினுடைய விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் இரண்டு மாதங்களுக்குள் எந்த வழக்கும் முடிந்தபாடில்லை. பொதுவாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், காவல் துறை வழக்கு பதிவு செய்து, அவர்கள் குற்றப் பத்திரிகை போடுவதற்கே இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் எடுத்துக் கொள்ளக்கூடிய கால கட்டங்களை நாம் நிறைய பார்த்திருக்கிறோம். ஆகவே, இனி இவ்வளவு நாட்களுக்குள் இந்த வழக்கை முடிக்க வேண்டுமென்ற ஒரு சட்ட திருத்தத்தைக் கொண்டு வருவது இயலாத ஒரு காரியம். ஆனால், சாட்சிகளைக் கொண்டுபோய் நீதிமன்றத்திலே நிறுத்தாத

காரணத்தினால்தான் நிறைய வழக்குகள் இன்று தேங்கிக் கிடக்கின்றன. வரதட்சணை சம்பந்தமாக எத்தனை வழக்குகள் இப்போது நிலுவையில் இருக்கின்றன? தமிழகத்தில் எத்தனை வழக்குகள் தற்போது பதிவு செய்யப்பட்டிருக்கின்றன? எத்தனை வழக்குகள் இப்போது முடிந்திருக்கின்றன? என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு அம்சங்களை தன்னுடைய கேள்விகள் மூலம் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, எவ்வளவு வழக்குகள் இருக்கின்றன என்று. அதற்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவது அம்சம், வழக்குகளைப் பதிவு செய்வதிலே கால தாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அதற்காகத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு 'டைரக்டரேட் ஆஃப் ப்ராசிகூயூஷன்' என்ற அமைப்பை உருவாக்கி ஆறு மாத காலத்தில் இந்த 'க்ரிமினல்' வழக்குகளையெல்லாம் மிகமிக வேகமாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரதட்சணைப் பிரச்சினையில், கிராமப் பகுதிகளிலே சில சமயங்களில் இரண்டு, மூன்று திருமணங்கள் கூட செய்து கொள்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு பதிவு செய்வது கூட சில நேரங்களிலே முடியாத சூழ்நிலை இருப்பதாகச் சொல்கின்றார்கள். ஆகவே, எந்தெந்த சமுதாயத்தில் இப்படி இரண்டு திருமணங்கள், மூன்று திருமணங்கள் செய்து கொள்ளலாம் என்று ஏதாவது விதி இருக்கிறதா? இல்லையென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை முழுமையாக அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் மிகத் தெளிவாக இருக்கிறது. வரதட்சணை வாங்கினால் அது எந்தச் சமுதாயமாக இருந்தாலும் சட்டத்தினுடைய கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டுமென்று இருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

1995 நவம்பர் 3]

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணை கொடுமை என்று வழக்குகள் இருக்கின்றன. சில நேரங்களில் ** வரதட்சணை கொடுமை என்று பொய் வழக்கு போடுகிறார்கள் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒட்டுமொத்தமாக **என்று சொல்லிவிட்டு **என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தம் இல்லாமல், தொடர்பில்லாமல் கேள்வி இருக்கின்ற காரணத்தினால் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

3—

வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரண உதவி

*33332—**திரு. ப. கலியபெருமாள்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட புயல் மழையினால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS